# வானொலிக்குயில் ராஜேஸ்வரி சண்முகம்

## ஆழத்து முத்துக்கள் 158

- தெளிவத்தை ஜோசப் -

பாடசாலை நாட்களிலேயே நாடகத்தில் நாட்டம் மிகக் கொண்ட மாணவியாக இருந்த ராஜேஸ்வரி பிச்சாண்டி தனது 14வது வயதில் ஒரு சிறுமியாக இலங்கை வானொலியின் கலைஞர் தெரிவுக்கு வந்திருந்தார். குரல் தெரிவின் நடுவர்களாக இருந்தவர்கள் பேராசிரியர் சிவத்தம்பியும் சானாவும். பங்கேற்க வந்திருந்தவர்களுக்கு வாசித்துக்காட்ட வேண்டிய பிரதிகள் வழங்கப்பட்டன. பிரதிகளை வாசித்து தங்களை பழக்கப்படுத்திக் கொண்டவர்கள் அவரவர் நேரம் வந்ததும் இரண்டு மூன்று வரி-களை வாசித்துக் காட்டிய பின் போய் அமரும்படி கோரப்பட்டனர்.

சிறுமி ராஜேஸ்வரியின் நேரம் வந்தது. இரண்டு மூன்று வரிகள் வாசித்த பிறகும் போய் உட்கார் என்னும் வார்த்தை சானாவின் வாயில் இருந்து வரவில்லை. இன்னும் இரண்டொரு வரிகளைக் கூறட்டும் கேட்போம் என்றிருப்பதாகப் பேராசிரியருக்குத் தோன்றி இருக்கிறது.

அந்த சின்னப்பெண்ணுக்குள் இருந்து வெளி வந்த குரலின் உணர்வும் இனிமையும் சானா அவர்களைக் கவர்ந்திருக்கிறது. கடிதம் வரும் என்று அனைவரும் அனுப்பப்பட்டனர்.

பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டி நடைபெற்றபோது பிரதம விருந்தினராக வந்திருந்தவர் சானா அவர்கள். கண்ணகியாக மேடையில் தோன்றி பார்வையாளர்களை அதிர வைத்தவர் ராஜேஸ்வரி. சானாவும் அதிசயித்து நின்றார். வானொலிக்கு வந்து தன்னைக் காணும்படி கல்லூரி ஆசிரியர்கள் மூலம் கூறிச் சென்றிருந்தார்.

ஒரு வானொலி நாடகக் கலைஞராக தெரிவு செய்யப்பட்டார் இந்த ராஜேஸ்வரி.

பிச்சாண்டிப்பிள்ளை என்பது ராஜேஸ்வரியின் தந்தையின் பெயர். அவர் தமிழ் நாட்டுக்காரர். அண்ணாமலை அம்மாள் என்னும் கொழும்புப் பெண்ணை அவர் திருமணம் செய்து கொண்டார்.

இவர்களின் முதல் பிள்ளையே ராஜேஸ்வரி. கொழும்பு கொட்டாஞ்சேனையில் 1938 மார்ச் 16ல் பிறந்தவர் இவர். கொட்டாஞ்சேனை மத்திய மகாவித்தியாலயத்தில் ஆங்கில மூலத்தில் கல்வி பயின்றவர்.

அந்த நாட்களில் வானொலிக் கலைஞர்களை நான்கு பிரிவாகப்பிரித்து வைத்திருந்தனர். மாதர் பகுதிக்கலைஞர்கள், உரைச் சித்திரக் கலைஞர்கள், நாடகக்கலைஞர்கள், கல்விச்சேவைக் கலைஞர்கள் என்பதே அவை. ஒரு பிரிவுக்கலைஞர்கள் மற்றப் பிரிவில் பங்குபற்ற முடியாது எனும் விதியும் சில காலம் நடைமுறையில் இருந்திருக்கிறது.

ராஜேஸ்வரி நடித்த முதல் வானொலி நாடகம் என்.எஸ்.எம். ராமையாவின் 'விடிவெள்ளி' என்பதாகும்.

சில்லையூர் செல்வராசனின் 'சிலம்பின் ஒலி' வானொலி தொடர் நாடகத்திலும் இவர் நடித்துள்ளார்.

ராஜேஸ்வரியின் இனிமையான குரல் அவரது வானொலி வெற்றிக்கான ஒரு மிகப்பெரிய சக்தியாக அமைந்திருந்தது.

வானொலி நாடகக் கலைஞராக 1952ல் தெரிவு செய்யப்பட்ட இவர், பிறகு பகுதி நேர அறிவிப்பாளராகி நிரந்தர அறிவிப்பாளராகப் பதவி உயர்வு பெற்று பல வானொலி நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளராகவும் தடம் பதிக்கத்தொடங்கினார்.

வானொலிக்காக இவர் தயாரித்தளித்த பொதிகைத்தென்றல் வர்த்தக சேவையின்



சர்வதேச ஒலிபரப்பினூடாக இந்தியத்தமிழ் வானொலி ரசிகர்களையும் வெளிநாடுக-ளில் வாழும் தமிழ் ரசிகர்களையும் வெகுவாகக் கவர்ந்திருந்தது.

பூவும் பொட்டும் - மங்கையர் மஞ்சரி, இசையும் கதையும், பொங்கும் பூம்புனல், ஒலிமஞ்சரி, இசைச்சித்திரம் என்று எண்ணற்ற வானொலி நிகழ்ச்சிகள் ராஜேஸ்வரியின் கைவண்ணத்தாலும் குரல் வளத்தாலும் புகழ் பெற்றுத்திகழ்ந்தவை. ஈழத்து ரசிகர்களின் உள்ளம் கவர்ந்தவை.

மேடை நாடகம் மூலமே தனது கலை வாழ்வை ஆரம்பித்த ராஜேஸ்வரி அவர்களை அதே அரங்கியல் துறை மேலும் மெருகுறச் செய்திருக்கிறது.

யாழ்ப்பாணம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் சி. சண்முகம். இலங்கை வானொலிக்குப்பக்கத்தில் இருந்த அரச சிறு கைத்தொழில் திணைக்களத்தில் உத்தியோகம் பார்த்தவர். வானொலி மேடை நாடக எழுத்தாளர், தயாரிப்பாளர், அடிக்கடி இலங்கை வானொலிக்குள் நாடகங்களுக்காக வந்து போனவர் ராஜேஸ்வரியைக் காதலிக்கத்தொடங்கினார். சண்முகத்தின் நாடகங்களும் ராஜேஸ்வரியின் நடிப்பும் குரலும் இவர்களின் காதலையும் வளர்த்து விட்டது.

ராஜேஸ்வரியை ராஜேஸ்வரி சண்முகமாக மாற்றியது நாடகமும் வானொலியும் மட்டுமல்ல சானாவும் சேர்ந்து தான்.

சி. சண்முகம் எழுதித் தயாரித்த பெரும்பாலான நாடகங்களில் ராஜேஸ்வரி அற்புதமாக நடித்துள்ளார்.

1966 ஜுன் 24, 25ம் திகதிகளில் லயனல் வெண்ட் அரங்கில் மேடையேறிய சி.சண்முகத்தின் 'கடவுள் எங்கே' நாடகம் ஜோர்ஜ் சந்திரசேகரனால் நெறியாள்கை செய்யப்பட்டது. இதில் சண்முகத்தின் மனைவி ராஜேஸ்வரி சண்முகமும் மகள் வசந்தி சண்முகமும் நடித்துள்ளனர். 'வரணியூரான்' எஸ்.எஸ். கணேசபிள்ளை, நடராஜசிவம், ஜோக்கிம் பெர்னான்டோ, செல்வசேகரன் போன்றோர் சண்முகத்தால் தெரிவு செய்யப்பட்ட இதர நடிகர்கள்.

சண்முகம் எழுதித் தயாரித்த 'ஸ்ரீமான் கைலாசம், ஸ்புட்னிக் சுருட்டு', 'மோசை விரிப்பு' போன்ற பல மேடை நாடகங்களில் நடித்தவர் திருமதி ராஜேஸ்வரி சண்முகம். இவர் நடித்துப்புகழ் பெற்ற நாடகங்களில் ஒன்று 'தேரோட்டி மகன்'. ராஜேஸ்வரி சண்முகம் அதில் குந்திதேவி.

இந்த நாடகத்துக்கு விமர்சனம் எழுதிய பேராசிரியர் கைலாசபதி, 'தேரோட்டி மகனின் கதாநாயகன் கர்ணன்தான். ஆனாலும் தனது நடிப்பால் அன்றைய நாடகத்தை ஆக்கிரமித்துக்கொண்டவர் யாவரையும் கவர்ந்தவர் குந்திதேவியாக நடித்த ராஜேஸ்வரி சண்முகம்தான். பொதுவாகவே நம்மிடையே நடிகைகள் குறைவு என்னும் வாய்ப்பாட்டுக்கெல்லாம் ஈடு செய்பவர்போல் அவர் நடித்தார்' என்று எழுதி வைத்துள்ளார்.

வானொலி நாடகம், மேடை நாடகம் என்பவைகளுக்கு அப்பால் வானொலி நிகழ்ச்சிகள் மூலம் பிரபல்யம் பெற்றவர் இவர். இந்தியாவின் தென்பொதிகைத் தமிழ்ச் சங்கம் 1995ல், இராஜேஸ்வரி சண்முகத்துக்கு 'வானொலிக்குயில்' எனும் பட்டம-ளித்து கௌரவம் செய்துள்ளது.

1998ல் ராஜேஸ்வரியின் மணி விழாவுக்காக கவிஞர் வைரமுத்து எழுதி அனுப்பிய வாழ்த்துப்பா இது.

*'வசந்தத்தில்தான் குயில் கூவுமாம்.*
*இந்த வானொலிக்குயிலுக்கு வருடமெல்லாம் வசந்தமாகவே திகழ வாழ்த்துகிறேன்!'*

ஈழத்துத் தமிழ் சினிமாவின் பல பெண் பாத்திரங்களுக்கு பின்னணிக் குரல் கொடுத்திருப்பவர் ராஜேஸ்வரி சண்முகம். அரச விருதுகள், தனியார்துறை விருதுகள் எனப் பல விருதுகள் பெற்றுள்ளார் இவர்.

பிரான்ஸ், சுவிஸ், நோர்வே, ஜெர்மனி போன்ற வெளிநாடுகளிலும் மேடை அறிவிப்பாளராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்ட வானொலி அறிவிப்பாளர் இந்த வானொலிக்குயில் ராஜேஸ்வரி சண்முகம் அவர்கள்.

வானொலிக் கலைஞர், மேடை நடிகர், அறிவிப்பாளர் எனப் பல்துறை ஆளுமை கொண்டியங்கிய திருமதி ராஜேஸ்வரி சண்முகம் அவர்கள் பெப்பிரவரி 23, 2012ல் தனது 74வது வயதில் கொழும்பில் காலமானார்.



theliwathai.joseph@thaiveedu.com

## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**